1981 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்ற ஒரு கருத்து இருந்த காரணத்தினால், அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட காரணத்தினால் அண்மையிலே அரசு தாட்கோவைச் சார்ந்த மாவட்ட—கோட்ட வளர்ச்சி அலுவலர்களையும், வங்கிகளின் சார்பாக அந்த அதிகாரிகளையும் அழைத்து, அதுபற்றிய கூட்டம் நடந்திருக்கிறது. அதிலே அனைத்து முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்ற குறைபாடுகள் இனிமேல் ஏற்படாது.

முட்டவாக்கம் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு குடிநீர் வழங்கும் திட்டம்

*வினா எண் 40:—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) காஞ்சிபுரம் ஒன்றியத்தைச் சார்ந்த முட்டவாக்கம் காலனிக்கு அரிசன நலத்துறை சார்பில் கட்டப்படுகின்ற குடிநீர் திட்டம் எட்டு ஆண்டுகளாக முடிவுபெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் உடனடியாக நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம் முட்டவாக்கம் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு ஒரு குழாய் கிணறு வெட்டுதல் மற்றும் மேல்நிலைநீர் தொட்டி கட்டுதல் ஆகிய இருபணிகளை அதே கிராமத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த இரு ஒப்பந்தக்காரரிடம் 1975ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. மேற்சொன்ன ஒப்பந்தக்காரர்களை மாவட்ட ஆட்சியர் வற்புறுத்தியதன் பேரில் தற்பொழுது இவ்விரு பணிகளும் முடிக்கப்பட்டு, குழாய் மூலம் அக்குடியிருப்பிற்குத் தண்ணீர் வழங்கப்படுகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அமுலாக்கப்பட்டுள்ள முட்டவாக்கம் குடிநீர்த் திட்டத்தில் போடப்பட்டுள்ள மோட்டார் போதிய வலுவற்றிருப்பதன் காரணமாக, அந்தக் குடிநீர் தொட்டி முழுவதுமாகத் தண்ணீர் நிரப்ப முடியாத சூழ்நிலை இருப்பதை அமைச்சர் அறிவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று முன்னர் பொருத்தப்பட்ட ஒரு குதிரைச் சக்தியுள்ள இயந்திரம் நீர் இறைக்கப் போதுமானதாக இல்லாததால், 5 குதிரை சக்தியுள்ள மின் இயந்திரம் பொருத்தப்பட்டு, தற்போது அந்தக் குடியிருப்புக்குக் குழாய் மூலமாக நீர் அளிக்கப்படுகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முட்டவாக்கம் காலனியில் இன்னும் பாதி கிராமத்திற்குக் குடிநீர் வழங்க வேண்டியிருப்பதால், அப்பகுதிக்கும் குடிநீர் வசதியளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10–20]

2. தகவல் கோரல்.

(அ) திரு. பூபேஷ்குப்தா மறைவு குறித்து.

திரு. மு. அம்பிகாபதி: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 21-ஆம் தேதி நடந்த சபை நடவடிக்கைகளில் மாண்புமிகு ஆதித்தனார் அவர்களுக்கு அஞ்சலி தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதேபோல இராஜ்யசபாவில் உறுப்பினராக இருந்து மறைந்த தோழர் பூபேஷ் குப்தா அவர்களுக்கு.......(குறுக்கீடு) சஞ்சய் காந்திக்கு இங்கே இரங்கல் தீர்மானம் வந்திருக்கிறது......................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்துவது என்பது வேறு, கட்சி வேறுபாடுகள் குறித்து விவாதம் செய்வது என்பது வேறு. அதற்கு இந்த அவையைப் பயன்படுத்த வேண்டாம்.